| | திட்டங்களினை மேம்படுத்துதல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் தொடர்பில் பொறுப்புக்களினை ஒப்படைத்து மூத்த உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்தல். | | | |
| **20 . கணக்காய்வுப் பந்திகளுக்குப் பதிலளித்தல்.** | | | | |
| 20.1 | கடந்த ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீர் செய்யப்பட்டிருத்தல். | இணக்கம் | | |

உதவி ஆணையாளர்,
உணவு ஆணையாளர் திணைக்களம்.

**உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிசார் கூற்று தொடர்பில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை'**

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1. தகுதிவாய்ந்த கருத்துரை

தலைப்பு 300 - உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2022 திசம்பர் 31 ஆந் திகதியன்றைய நிதிசார் கூற்று, அத்தினத்தன்று முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயற்திறன் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களுடனான 2022, திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் திருத்தி வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(1) என்ற அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்படும் இந்நிதி சார் கூற்றுத் தொடர்பில் எனது கருத்துக்களினை எடுத்தியம்புதல் மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(6) பிரிவுடன் திருத்தி வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 10 வது பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படும்.

இவ் அறிக்கையில் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களினூடாக 2022 திசம்பர் 31 ஆந் திகதியன்றைய உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதி நிலவரம் மற்றும் அன்றைய தினம் முடிவுற்ற ஆண்டு தொடர்பிலான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல், இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உண்மையானதும் நியாயமானதுமாக உள்ளது என்பதே எனது கருத்தாகும்.

### 1.2. தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பிலான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.6 வது பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு எனது தகுதிவாய்ந்த கருத்துரை இடம்பெறுகிறது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க (இ.க.நி) என் மூலம் கணக்காய்வு இடம்பெற்றுள்ளது. கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, கணக்காய்வின் பொறுப்பு போன்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. என் மூலம் புலனாய்வு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பில் அடித்தளமொன்றினை வழங்குவதற்கு என்மூலம் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுனமானவை எனவும் உன்னதமானவை எனவும் நான் நம்புகின்றேன்.

### 1.3. நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிணங்கவும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கக் கணக்காய்வுச் சட்டத்தின் 38 வது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்கவும் உண்மையினையும் மற்றும் நியாயத்தினையும் எடுப்பியம்பும் வகையில் நிதிசார் கூற்றுக்களினைத் தயாரித்தல் மற்றும் ஊழல் அல்லது மோசடி தொடர்பில் ஏற்படக்கூடிய போதுமான தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவையான உள்ளக நிர்வாகத் தீர்மானம் எடுத்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) வது பிரிவின் பிரகாரம், திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு ஏற்றவாறு சுய வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சரியானவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளினை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி முகாமை தொடர்பில் விளைத்திறனான உள்ளக முகாமைத்துவ திட்டமொன்றினைத் தயாரித்து முன்னெடுக்கப்பட்டு வருவகிறது என்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அத் திட்டத்தின் விளைத்திறன் தொடர்பில் அவ்வப்போது மீளாய்வு இடம்பெற்று அதன் பிரகாரம் திட்டத்தினை விளைத்திறனாக முன்னெடுத்துச் செல்லுவதற்கு தேவையான மாற்றங்கள் இடம்பெறுதல் வேண்டும்.

### 1.4. நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிசார் கூற்றுக்கள், ஊழல் மற்றும் தவறின் காரணத்தினால் ஏற்படும் தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து, நியாயத்தினை மேலும் வழங்குதல் மற்றும் எனது கருத்துரையினை உள்ளடக்கி கணக்காய்வாளரின் அறிக்கையினை விடுவித்தல் எனது நோக்காகும். நியாயத்தினை உறுதிப்படுத்துதல் உயர் மட்ட உறுதிப்பாடு எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை முன்னெடுக்கும்போது, அது எந்நேரமும் கணிசமானளவு தவறான கூற்றுக்களினை வெளிக்கொணர்ந்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. ஊழல் மற்றும் தவறு தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை விளைவிக்கும் என்பதால் கணிசமான தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், இந்நிதிக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு, பயன்பாட்டாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களின் மீது தாக்கத்தினை விளைவிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்மூலம் ஆய்வில் தொழில் நடுவர் மற்றும் தொழில் அமைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என் மூலம் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடித்தளத்தினை வழங்கும்போது, ஊழல் மற்றும் தவறின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய கணிசமான தவறான கூற்றில் கவனத்தினைச் செலுத்தி மதிப்பீடு செய்தவேளையில் தருணத்திற்கேற்ப உயர் கணக்காய்வு முறைமை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. போதுமான தவறுக் கூற்றினால் இடம்பெறும் விளைவுகளுக்கு மேலாக ஊழல்களினால் இடம்பெறும் தாக்கம் அதிகமானது என்பதுடன், பிளவு, தவறு ஏட்டினைத் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கைவிடுதல் தவறொன்று ஏற்படுவதற்கு காரணமாகும்.

  - உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைத்திறன் தொடர்பில் கருத்துரையினை வெளிப்படுத்துவதற்கு எண்ணவில்லையாயினும், தருணத்திற்கு உகந்த

கணக்காய்வு முறைமையினைத் திட்டமிடுவதற்கு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பிலான புரிந்துணர்வொன்று பெறப்பட்டுள்ளது.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் சிறந்த தன்மை, கணக்கீடு செய்யப்படும் மதிப்பீடுகளில் நியாயபூர்வம் மற்றும் முகாமைத்துவத்தினால் முன்னெடுக்கப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளில், பொருத்தப்பாடு தென்பட்டுள்ளது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு, உள்ளீர்ப்புச் செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உன்னதமான வகையிலும் மற்றும் நியாயபூர்வமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படைத்தன்மையினை உள்ளடக்கி நிதிசார் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வினை அலசி ஆராய்தல், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்.

### 1.5. <u>பிற சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை.</u>

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(இ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களினை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் நேரொத்தவை எனவும்,

(ஆ) கடந்த வருடம் தொடர்பிலான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் என்மூலம் இடம்பெற்ற பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தன.

### 1.6. <u>நிதிசார் கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துக்களினை எடுத்தியம்புதல்.</u>

#### 1.6.1. கட்டுநிதி இணக்கக்கூற்று

(அ.) பிற தலைப்புக்களினால் முற்பணம் “பீ” கணக்குக்குச் செய்யப்பட்ட வரவிடுதல் ரூபா.

1,688,480 என்றபோதிலும், அது கட்டுநிதி இணக்கக் கூற்றினூடாக பிற தலைப்புக்கள் சார்பில் அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பணம் “பீ” கணக்குச் சார்பில் செய்யப்பட்ட வரவிடுதலாக காட்டப்பட்டிருந்தது. மேலும் பிற தலைப்புக்களினால் முற்பணம் “பீ” கணக்குக்குச் செய்யப்பட்ட வரவிடுதல் ரூபா. 29,119 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ.) பிற நிறுவனங்களினால் அறிக்கையிடும் நிறுவனம் சார்பில் ஈடுசெய்யப்பட்ட செலவு

ரூபா. 14,216,655 என்றபோதிலும் அது, ரூபா. 14,245,775 என ரூபா. 29,119 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது,

#### 1.6.2. நிதிச் சொத்துக்கள்

I. 2022 திசம்பர் 13 ஆந் திகதிய 05/2022 என்ற அரச கணக்கியல் வழிகாட்டல்கள் 7.9 வது பந்தியின் பிரகாரம், நிதிக் காலவரையறையின் நிறைவில் அறிக்கையிடும் நிறுவனத்தினால் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா. 2,681,919 காசு மீதி, நிதி நிலவரம் தொடர்பிலான கூற்றில் காசு மற்றும் காசுக்குச் சமமானவையின் மீதியில் உள்ளடக்கப்படக்கூடாது என்றபோதிலும் அப்பெறுமதி சேர்க்கப்பட்டிருந்தது.

II. நிதி நிலவரம் தொடர்பிலான கூற்றில், நிதிச் சொத்துக்களின் கீழான, ரூபா. 402,886 VAT கட்டுப்பாடு என்ற பெயரில் மீதி காட்டப்பட்டிருந்தது.

### 1.6.3. தேறிய சொத்துக்கள்/தேய்மானம்

அரச கணக்கியல் வழிகாட்டல்கள் 7.8 வது பந்தியின் பிரகாரம் முற்பணக் கணக்குகளின் பெறுமதியில் வைப்புக் கணக்குகளின் பெறுமதியினைக் கழிப்பதன் மூலம் நிதி நிலவரம் தொடர்பிலான கூற்றில் தேறிய சொத்துக்கள்/தேய்மானத்தின் கீழுள்ள திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் பெறுமதியினைக் கணிப்பீடு செய்தல் வேண்டும் என்றபோதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்தது.

### 1.6.4. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண இருப்பு

2022 திசம்பர் 13 ஆந் திகதிய 05/2022 என்ற இலக்க அரச கணக்கியல் வழிகாட்டல்களின் 7.7 வது பந்தியின் பிரகாரம் ஆதனப் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதிக்குச் சமமான பெறுமதியினை, நிதி நிலவரம் தொடர்பிலான கூற்றில் தேறிய சொத்துக்கள்/தேய்மானத்தின் கீழ் இருப்பொன்றாக காட்டப்படுதல் வேண்டுமாயினும், நிதி நிலவரம் தொடர்பிலான கூற்றில், (ஏசிஏ-பி இல்) ரூபா. 89,119,276 என்ற வாடகை மற்றும் பணி முற்பணக் கணக்கு முற்பணக் கணக்கின் கீழ் காட்டப்படுதல் வேண்டும் என்றபோதிலும், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் சேர்க்கப்பட்டுக் காட்டப்பட்டமையின் காரணத்தினால், அதற்குச் சமமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் ஆதனப் பொறித் தொகுதி மற்றும் உபகரண இருப்புக் கணக்கு மீதியில் மாறுபாடு ஏற்பட்டிருந்தது.

### 1.6.5. வைப்புக் கணக்கு மீதிகள்

6000-0-0-016–0-120 என்ற வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா. 16,574,196 என்றபோதிலும் ACA 4 படிவத்தில் அது ரூபா. 1,657,419 ஆகக் காட்டப்பட்டிருந்தது, அதன் பிரகாரம், வைப்புக் கணக்குகளின் ஆரம்ப மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 103,464,394 என்றபோதிலும். ACA 4 படிவத்தில் அது, ரூபா. 88,547,618 ஆக, ரூபா. 14,916,776 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.6. முற்பணக் கணக்கு மீதிகள்

அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம், ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் ரூபா. 332,250 ஆல் வேறுபட்டுள்ளதுடன், சிறிது காலம் தொடக்கம் காணப்பட்ட இம்மீதியினை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கு 2022 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.7. கட்டுநிதி மீதி

திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம், கட்டுநிதி மீதி இல்லாது காணப்பட்டபோதிலும், நிதி நிலவரக் கூற்றில் ரூபா. 2,681,919 உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.6.8. கணக்காய்வு தொடர்பிலான சான்றுகள் இல்லாமை.

பாதீட்டுத் திணைக்களத்தினூடாக 1701 செலவுத் தலைப்புத் தொடர்பில் ஒதுக்கீடுகள் செய்யப்படாதிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 66 ஐ மாற்றுவதனூடாக அச்செலவு விடயத்திற்கு ரூபா. 4,150,000 ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டிருந்தது. இச் செலவுத் தலைப்பில் இழப்புக்கள் மற்றும் நீக்கிவிடுதலின் கீழ் ரூபா. 4,129,525 புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டிருப்பினும், அது தொடர்பிலான எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.9. **கணக்கீட்டுத் தவறினைச் சீர்செய்தல்.**

அத்தியாவசியப் பொருட்களினை விநியோகிக்கும் முற்பணக் கணக்கினை முடிவுக்குக் கொண்டுவருவதிலுள்ள மிகையின் காரணமாக பொதுத் திறைசேரிக்கு அதிகமாக செலுத்தியமையின் காரணமாக ஏற்பட்ட கணக்கீட்டுத் தவறினைச் சீர்செய்வதற்கு நானாவித வருமானங்களினை கணக்குக்கு வரவிடச் செய்து மிகையான ரூபா. 1,719,407 நிதிச் செயற்திறன் கூற்றின் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு நிதியினைச் செலவிடுதலின் கீழ் திறைசேரி முற்பணமாகக் காட்டப்பட்டிருந்தது.

2. **<u>நிதி மீளாய்வு</u>**

**2.1. <u>செலவு முகாமைத்துவம்</u>**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2021 யூலை மாதம் 28 ஆந் திகதிய 01/2021 என்ற இலக்க தேசியப் பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 2,2 (அ) பந்தியினூடாக 2021 யூலை 01 ஆந் திகதியன்றைய உண்மையிலுள்ள ஆளணியினை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டு தொடர்பில் சம்பளங்கள் மற்றும் பிற கொடுப்பனவுகள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாகக் கணிப்பீடு செய்தல் வேண்டும் எனவும் 2022 ஆம் ஆண்டினூடாக புதிய ஆட்சேர்ப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் அது தொடர்பில் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாது எனவும் அறிவிக்கப்பட்டவேளையில் அதன் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையின் காரணமாக,

- சம்பளங்கள் மற்றும் கூலிகள் 1001 செலவு விடயங்கள் ரூபா, 3,000,000 அதாவது நூற்றுக்கு 9 நிதிப் பிரமாணம் 66 இன் ஊடாக பிற செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், அம்மாற்றம் இடம்பெற்றதன் பின்னர் செலவுகளினை ஈடுசெய்ததன் பின்னர் ரூபா. 1,484,341 அதாவது திருத்தப்பட்ட மதிப்பீட்டில் நூற்றுக்கு 5% மீதமாகியிருந்தது.

- பிற கொடுப்பனவுகள் 1003 செலவு விடயங்கள் ரூபா,1,100,000 அதாவது நூற்றுக்கு 6.9% நிதிப் பிரமாணம் 66 இன் ஊடாக பிற செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், அம்மாற்றம் இடம்பெற்றதன் பின்னர் செலவுகளினை ஈடுசெய்யததன் பின்னர் ரூபா. 485,905 அதாவது திருத்தப்பட்ட மதிப்பீட்டில் நூற்றுக்கு 3.26% மீதமாகியிருந்தது.

(ஆ) 2022 திசம்பர் 13 ஆந் திகதிய 05/2022 என்ற அரச கணக்கியல் வழிகாட்டல்களின் 3.4 வது பந்தியின் பிரகாரம் செலவு விடயமொன்றின் மொத்தத் தேறிய ஒதுக்கீடுகள் மற்றும் உண்மையான செலவுகளுக்கிடையேயான வேறுபாடு அச்செலவு விடயத்தின் தேறிய ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 5 சதவீதம் அல்லது 10,000 போன்ற இரண்டிலும் எது அதிகமான நிதியினால் அதிகரிக்கப்பட்டிருப்பின் வேறுபாட்டிற்குக் காரணங்கள் முன்வைக்கப்படுதல் வேண்டுமாயினும் செலவு விடயங்கள் 9 உடன் தொடர்பில் வேறுபாட்டிற்குக் காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2. பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு வருதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) செலவு விடயங்கள் 6 தொடர்பில் மீதியினைத் தாண்டி ரூபா. 4.122,969 செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா. 99,800 ஆகிய 02 பொறுப்புக்கள் 2023 மார்ச் 30 ஆந் திகதியளவில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 என்ற பாதீட்டுச் சுற்றுநிருபத்தில் xii வது பந்தியின் பிரகாரம் சகல நலன்புரி மற்றும் நிவாரண உதவி நிகழ்ச்சித் திட்டங்களினை மீளவும் மீளாய்வு செய்து அவை அத்தியாவசியமாகக் கிடைக்கவேண்டிய குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு அல்லது அத்தியாவசியமான பயனாளிகளுக்கு மாத்திரம் வழங்குதலினை மேற்கொள்ளுதல் வேண்டும் என எடுத்துக்காட்டப்பட்டிருந்தபோதிலும் அது தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி சிறு மற்றும் நடுத்தரளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களினை விழித்தெளச் செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா. 50,000,000 ஒதுக்கீடுகள் முழுமையாக மீதமாகியிருந்தது. எவ்வாறாயினும் 300-1-1-4-2506 செலவு விடயத்தின் கீழ் மேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு ரூபா. 30,000,000 பொறுப்பொன்று காட்டப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் அது தொடர்பில் உடன்படிக்கைக்கு வருதல் அல்லது அது தொடர்பில் செயற்படாதிருக்கும்போது 2023 பெப்ரவரி மாதத்தில் ரூபா. 20,000,000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக் கூற்றின் பொறுப்புக்கள் தொடர்பிலான கூற்று (i) (இணைப்பு iv) இன் ஊடாக நிதிப் பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் பொறுப்புக்களுக்கு வந்த கடப்பாட்டுக் கூற்றில் ரூபா. 216,039 கடப்பாட்டிற்கு மாத்திரம் உள்ளடக்கப்படுதல் வேண்டுமாயினும் இணைப்பு (iii) இல் உள்ளடக்கப்பட்ட ரூபா. 4,469,507 பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக நி.பி. 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் பொறுப்புக்களுக்கு வந்த கடப்பாட்டுக் கூற்றில் ரூபா. 4,253,468 அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) இந்திய உதவியினைப் பகிர்ந்தளித்தல் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் செலவு பிற செலவுத் தலைப்பான வர்த்தக அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இடம்பெற்றபோதிலும் கடப்பாடு மற்றும் பொறுப்புக்களின் கீழ் அந்நிகழச்சித் திட்டங்களுடன் தொடர்பிலான ரூபா. 173,883 மேலதிக நேரம் மற்றும் விடுமுறைத் தினச் சம்பளம், 300-1-1-0-1002 என்ற உணவுத் திணைக்களச் செலவுத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.3. பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துதல்.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் மனிதாபிமான உதவியாக 40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா மற்றும் 50 மெற்றிக் தொன் மருந்துகளினை இலங்கைக்கு வழங்கும் வேலைத்திட்டம் 03 கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. இம் மூன்று கட்டத்தில் துறைமுகத்திலிருந்து பொருட்களினை விடுவித்தல் தொடக்கம் உரிய மாவட்ட செயலகங்களுக்கு உணவுப் பொருட்களினைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடு உணவு ஆணையாளர் திணைக்களத்தினூடாக இடம்பெற்றிருந்தது. இதில் முதலாவது கட்டம் தொடர்பில் அரிசி 9,000 மெற்றிக் தொன் மற்றும் பால்மா 50 மெற்றிக் தொன்னும், இரண்டாவது

கட்டம் தொடர்பில் அரிசி 14,356.05 மெற்றிக்தொன் மற்றும் பால்மா 250 மெற்றிக் தொன்னும், மூன்றாவது கட்டம் தொடர்பில் அரிசி 16,356.05 மெற்றிக் தொன் மற்றும் பால்மா 200 மெற்றிக் தொன் என்றவாறு வழங்கப்பட்டிருந்தது. இவ் உதவிகளினைப் பகிர்ந்தளிப்பதற்குச் செலவுகளினை ஈடுசெய்வதற்கு வர்த்தக வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து ரூபா. 481,340,167 ஒதுக்கீடொன்று திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

(அ) கிளியரிங் கவுசினைத் தெரிவு செய்தல்.

(i) முதலாவது கட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிவாரண உதவியினை விடுவிப்பதற்கு விலைமனுக் கோரல் 2022 மே மாதம் 17 ஆந் திகதி இடம்பெற்றுள்ளதுடன், பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

- 2006 கொள்முதல் வழிகாட்டுதல்கள் கோவையின் 3.4 பந்தியின் பிரகாரம் மின்னஞ்சலினூடாக விலைமனுக்களினை விசாரணை செய்வதில் 05 நாட்கள் காலப்பகுதியொன்று வழங்கப்படுதல் வேண்டுமாயினும் விலைமனுக்களினை முன்வைப்பதற்கு ஒரு நாள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. 03 நிறுவனங்களிலிருந்து முன்வைக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் ஒரு பிரத்தியேக நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், விலைமனுக்களினை முன்வைத்ததற்கு எழுத்துமூலச் சான்று எதுவும் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- எவ்வாறாயினும் விடயப்பரப்பில் வேறுபாடு ஏற்பட்டமையின் கீழ் 2022 மே மாதம் 19 ஆந் திகதி மீளவும் ஒரு தடவை 07 நிறுவனங்களிலிருந்து மின்னஞ்சலினூடாக விலைமனுக்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன், முன்னர் தெரிவு செய்யப்பட்ட பிரத்தியேக நிறுவனம் மாத்திரமே விலைமனுக்களினை முன்வைத்திருந்தது. விடயப் பரப்பில் மாற்றம் ஏற்பட்டமையின் கீழ் மீளவும் விலைமனுக்கள் கோரப்பட்டபோதும் அம்மாற்றம் என்னவென்று கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உதவி பெறும் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டத்திற்கு கிடைக்கப் பெற்ற உதவியினை விடுவிக்கச் செய்யும் நடவடிக்கைக்கு பிரபல்யமான பத்திரிகை விளம்பரத்தினூடாக 2022 யூன மாதம் 08 ஆந் திகதி மீளவும் விலைமனு கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 02 நிறுவனங்களினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வேளையிலும் மேற்குறிப்பிட்ட நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், குறைந்த விலையினை முன்வைத்துள்ள நிறுவனம் விரிவுசார் மதிப்பீட்டுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்யவில்லை என குறிப்பிட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அவ் விலைமனுக்களினை நிராகரித்துள்ளது.

(ஆ) விநியோகிக்கும் திட்டம்

விநியோகிக்கப்படுவதற்கு உறுதி செய்யப்பட்ட அளவிற்கும் விநியோகிக்கத் திட்டமிடப்பட்ட அளவிற்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டுள்ளது. முதலாவது கட்டத்தில் 7,250 கிலோ கிராம் அரிசி மற்றும் 450 கிலோ கிராம் பால்மாவும், இரண்டாவது கட்டத்தில் 33,950 கிலோ கிராம் அரிசி மற்றும் 600 கிலோ கிராம் பால்மாவும், மூன்றாவது கட்டத்தில் 256,050 கிலோ கிராம் அரிசி மற்றும் 1,245 கிலோ கிராம் பால்மாவும் விநியோகிக்கும் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிவாரண உதவி இருப்புக்களினைக் களஞ்சியப்படுத்துதல் மற்றும் களஞ்சியங்களினை வாடகைக்குப் பெறுதல்.

(i) இந்திய நிவாரணப் பொருட்களினைச் சேமிப்பதற்காக புகையிரதத் திணைக்களம் கொழும்பு பொருட் களஞ்சியசாலை வளாகத்தில் அமையப் பெற்ற C2 – F4 களஞ்சியத் தொகுதியினை, தீர்வையுடனான மாதாந்தக் குத்தகை வாடகை ரூபா. 517,440 க்கு 2022 மே மாதம் 23 ஆந் திகதி தொடக்கம் 2023 மே மாதம் 22 ஆந் திகதி வரை ஒருவருடக் காலப்பகுதிக்கு வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளதுடன், மீளவும் செலுத்தப்படும் ரூபா. 2,993,760 பிணை வைப்பும் வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியமான சுகாதார வசதிகள் உள்ளனவா என்பதைக் கவனத்திற்கொள்ளாது வாடகைக்கு எடுத்தமையினால் தேவைப்பாட்டிற்காக மிகையாக ரூபா. 278,025 நிதியினைச் செலுத்துவதற்கு நேரிட்டுள்ளது.

(ii) மேற்குறிப்பிட்ட களஞ்சியத் தொகுதிக்கு மேலதிகமாக 2022 யூலை மாதம் 29 ஆந் திகதி தொடக்கம் இந்திய நிவாரணப் பொருட்களினைச் சேமிப்பதற்காக புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான C2 – C களஞ்சியமும் வாடகைக்குப் பெறப்பட்டுள்ளதுடன், தீர்வையுடனான மாதாந்தக் குத்தகை வாடகை ரூபா. 206,976 மற்றும் பிணை வைப்புப் பணம் ரூபா. 413,952 செலுத்தப்பட்டுள்ளதுடன், குத்தகை வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**(iii)** இந்திய உதவி விநியோகத்தின் நேரடி ஆய்வு நாளில் மருதானை, புகையிரதக் களஞ்சியசாலைகள் இரண்டிலும் போதுமான இடம் இருந்தபோதிலும் புகையிரதத்தில் கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்ட அரிசி இருப்புக்களினை மருதானைக் களஞ்சியசாலையில் தேக்கி வைக்காது ஒறுகொடவத்தை களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தியமையின் காரணமாக மீளவும் மருதானைக் களஞ்சியசாலைக்குக் கொண்டுவருவதற்காக 2022 யூலை மாதம் 04 ஆந் திகதி தொடக்கம் யூலை 18 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா. 1,631,700 மேலதிகமான போக்குவரத்துக் கொடுப்பனவொன்று ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(iv) அரிசிப் பொதிகள் உடைந்தமையின் காரணமாக ஒறுகொடவத்தை மற்றும் மருதானைக் களஞ்சியசாலைகளில் அன்றாம் சேகரிக்கப்பட்ட அரிசியினை மீளவும் தூய்மைப்படுத்தி பொதியிட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டபோதிலும் அது தொடர்பில் போதுமான தகவல்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாதிருந்ததுடன், உடைந்த அரிசி மூடைகளினைப் பதப்படுத்துதல், புகையிரதக் களஞ்சியசாலைகளினைச் சுத்தப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்காக 2022 யூன் மாதம் 14 ஆந் திகதி தொடக்கம் 2022 யூலை மாதம் 16 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ரூபா.100,320 செலவும், சேதமடைந்த அரிசியினை சேகரிப்பதற்கான பொதியிடும் உறைகளினை கொள்வனவு செய்வதற்காக 2022 யூன் மாதம் 03 ஆந் திகதி தொடக்கம் 2022 செப்ரெம்பர் மாதம் 12 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா. 787,520 செலவொன்றும் ஈடு செய்யப்பட்டிருந்தது.

(v) அரிசி மூடைகளினைச் சுமந்து செல்லும் தொழிலாளர்கள் வண்டிகளில் ஏற்றுவதற்கு உதவியாகத் தரையில் அரிசி மூடைகளினைத் தாங்கியாகப் பயன்படுத்தியுள்ளதுடன், மேலும் அவற்றின் மீது

நடப்பதால் அரிசி மேலும் வீணடிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றினைத் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இருப்புக்களுக்கு நட்டம் ஏற்படுதல் மற்றும் பற்றாக்குறைகள்

(i) கட்டம் I, II, மற்றும் III இன் கீழ் கப்பலின் சரக்குக் கட்டணத்தின் பிரகாரம், பெறப்பட்ட அரிசியின் அளவு 40,000,000 கிலோகிராம் என்றபோதிலும் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அளவு 39,960,350 என்பதால் மீதி 39,650 கிலோகிராம் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதேபோல ஒறுகொடவத்தை மற்றும் மருதானைக் களஞ்சியசாலைகளுக்குப் பெறப்பட்ட அரிசியின் அளவு 39,957,650 கிலோகிராம் என்றபோதிலும், துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அளவுக்கும் மற்றும் களஞ்சியசாலைகளுக்குக் கிடைக்கப் பெற்ற அரிசியின் அளவுக்குமிடையே 2700 கிலோகிராம் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலாக மூன்று கட்டங்களில் கப்பல் மூலம்

(ii)

(iii)

(iv) ஏற்றப்பட்ட 42,300 கிலோகிராம் அரிசி, மீளவும் சுத்தம் செய்யப்பட்டு விநியோகிக்கும் அடிப்படையில் காணப்பட்டது. மூன்று கட்டங்களிலும் கப்பலின் சரக்குக் கட்டணங்கள் மற்றும் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பால்மாக்களின் அளவும் வேறுபட்டுள்ளதுடன், பற்றாக்குறையாக 6840 கிலோகிராம் காணப்பட்டது.

(v) கட்டங்கள் I,II மற்றும் III இன் கீழ் மாவட்ட செயலகம்/பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட நிவாரண உதவிகள் மற்றும் அவற்றின் அலுவலகங்களுக்குக் கிடைக்கப் பெற்ற நிவாரண உதவிகளில் 10910 கிலோகிராம் அரிசியிலும் 160 கிலோகிராம் பால்மாவிலும் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் பிரதேச செயலகம் | விநியோகிக்கப்பட்ட அளவு (Kg) | | கிடைத்தது என உறுதிப்பட்டுத்தப்பட்ட அளவு (Kg) | | பற்றாக்குறை (Kg) | |
|---|---|---|---|---|---|---|
| | அரிசி | பால் மா | அரிசி | பால்மா | அரிசி | பால் மா |
| கட்டம் I<br>நுவரெலியா | 894,000 | - | 893,700 | - | 300 | - |
| மன்னார் | 241,400 | - | 239,250 | - | 2,150 | - |
| முல்லைத்தீவு | 251,500 | - | 251,460 | - | 40 | - |
| கிளிநொச்சி | 222,500 | - | 221,900 | - | 600 | - |
| அம்பாறை | 494,750 | - | 494,400 | - | 350 | - |
| திருகோணமலை | 252,000 | - | 251,650 | - | 350 | - |
| இரத்தினபுரி | 247,350 | - | 247,250 | - | 100 | - |
| பதுளை | - | 4.950 | - | 4,886 | - | 64 |
| கொழும்பு பிரதேச செயலகம் | 120,000 | - | 119.960 | - | 40 | - |
| கட்டம் II<br>கண்டி | | - | | - | | - |
| பாத்ததும்பர | 20,000 | | 18,750 | | 1,250 | |
| கம்பகா | | - | | - | | - |
| திவுலபிட்டிய | 180.000 | | 178,650 | | 1,350 | |
| மீரிகம | 90,000 | - | 89,550 | - | 450 | - |
| அத்தனகல்ல | 135,000 | - | 134,950 | - | 50 | - |
| பொலன்னறுவை | 443,000 | 6,000 | 441,180 | 5.994 | 1,820 | 06 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அனுராதபுரம் | 1,982,500 | 22,488 | 1,980,500 | 22,428 | 2,000 | 60 |
| கட்டம் III<br>கொழும்பு | 20,000 | - | 19.940 | - | 60 | - |
| கொழும்பு பிரதேச செயலகம் | - | 9,000 | - | 8.970 | - | 30 |
| மொத்தம் | 5,594,000 | 42,438 | 5,583,090 | 42,278 | 10,910 | 160 |

(உ) விநியோகிக்கும்போது இருப்புக்கள் மிகையாகக் காணப்படுதல்.
பின்வரும் சந்தர்ப்பங்களில் கொண்டு செல்லப்பட்ட தொகையினை விட அதிகமானளவு பெறப்பட்டதாக மாவட்ட செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முறையான கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பின் கீழ் விநியோகித்தல் இடம்பெற்றுள்ளதா என்பது குறித்து கணக்காய்வில் சிக்கல் எழுந்துள்ளது.

| மாவட்டம் பிரதேச செயலகம் | விநியோகிக்கப்பட்ட அளவு அரிசி (Kg) | கிடைத்தது என உறுதிப்படுத்தப்பட்டுள்ள அளவு அரிசி (Kg) | மிகை அரிசி (Kg) |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் கட்டம் I | 977,250 | 978,650 | 1,700 |
| பதுளை கட்டம் II | 90,000 | 91,100 | 1,100 |
| கால்ல புஸ்ஸ கட்டம் II | 45,000 | 46,350 | 1,350 |

(ஊ) விநியோகித்தல் செலவுகள்

(i) மொனராகல மாவட்ட செயலகத்திற்கு 05 மெற்றிக்தொன் அரிசியும் மற்றும் 7.5 மெற்றிக்தொன் பால்மாவும் கொண்டு செல்லப்பட்டபோதிலும் அது தொடர்பிலான பிரயாணச் செலவுகளினைக் கணிப்பீடுசெய்யும்போது 20 மெற்றிக்தொன் அரிசியும் மற்றும் 25 மெற்றிக் தொன் பால்மாவும் விநியோகிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு பிரயாணச் செலவுகள் கணிப்பீடு செய்யப்பட்டமையினால் ரூபா. 298,024 மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது.

(ii) ஒரு மெற்றிக் தொன்னினை ஒரு கிலோமீற்றர் தூரத்திற்குக் கொண்டு செல்வதற்கு ரூபா. 35/- அறவீடு செய்வதற்கு கொள்முதல் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், பால்மாவினைக் கொண்டு செல்லும்போது கொண்டு செல்லப்பட்ட மெற்றிக் தொன் அளவினை விட அதிகமாக அதாவது லொறியின் கொள்ளளவுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. ஆய்வு செய்யப்பட்ட மாதிரியின் பிரகாரம் அதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள போக்குவரத்துக் கட்டணம் ரூபா. 771,308 ஆகும்.

(iii) தெரிவு செய்யப்பட்ட பிரத்தியேக நிறுவனம் விநியோகித்தல் தொடர்பிலான போக்குவரத்துக் கட்டணங்களினை ஈடுசெய்வதற்கு உடன்பட்டுள்ளபோதும் பிற பிரத்தியேகப் போக்குவரத்துச் சேவைகளினைக் கொண்டு விநியோகிக்கும் சேவைகளினைப் பெற்றமையினால் ரூபா. 457,494 மேலதிகமான பணத்தினை செலுத்துவதற்கு நேரிட்டுள்ளது.

(iv) அனுமதிச் செலவுகளுக்கான விலைமனுக் கோரல்களின் பிரகாரம் உடன்பட்ட அலகுச் செலவினைக் கணிப்பீடு செய்வதற்கு உரிய செலவு விடயங்களுக்கு மேலாக பிற செலவுகளாக கட்டம் I, II மற்றும் III தொடர்பில் ரூபா. 1,429,828 செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா. 540,979

துறைமுகக் கட்டணங்கள் மற்றும் சுங்க வரியாக முறையே ரூபா. 9,495,008 மற்றும் ரூபா. 9,651,650 செலுத்தப்பட்டுள்ளது.

(v) நிவாரண உதவியினை அனுமதித்தல் மற்றும் விநியோகித்தல் II மற்றும் III வது கட்டத்திற்கு 50 கிலோகிராம் அலகொன்றுக்கு ரூபா. 135,90 அறவிடப்பட்டுள்ளதுடன், அதில் போக்குவரத்துச் செலவு ரூபா. 98,15 ஆகும். அரிசியினைக் கொண்டுசெல்லும்போது 50 கிலோகிராம் அலகொன்றுக்கு ரூபா. 98.15 போக்குவரத்துச் செலவுகளாகச் செலுத்தப்பட்டிருந்தபோதும், பால்மாக்களினைக் கொண்டுசெல்லும்போது லொறி வாகனத்திற்கு ரூபா. 25,000 என்றவாறு இரண்டு கட்டங்களுக்கு ரூபா. 1,866,650 அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. II வது கட்டத்தின் கீழ் 250 மெற்றிக் தொன் பால்மாவினைக் கொண்டு செல்வதற்கு 53 லொறி வாகனங்களும், III வது கட்டத்தின் கீழ் 200 மெற்றிக் தொன் பால்மாவினைக் கொண்டு செல்வதற்கு 57 லொறி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 250 மெற்றிக் தொன் தொடர்பில் 53 லொறி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பின், 200 மெற்றிக் தொன் தொடர்பில் லொறி வாகனங்களின் எண்ணிக்கை குறைவடைதல் வேண்டுமாயினும் 57 லொறி வாகனங்களினைப் பயன்படுத்தியமை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. லொறி வாகனங்களினூடாக கொண்டு செல்வதற்கு ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 84,801,727 ஆகக் காட்டப்பட்டிருந்தபோதிலும் மேலும் தீர்க்கப்பட வேண்டிய போக்குவரத்துச் செலவு ரூபா. 4,407,915 அச் செலவுக்குச் சேர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கு மேலாக பிற செலவின் கீழ் ஈடு செய்யப்பட்ட ரூபா. 3,042,187 செலவினையும் உள்ளடக்கி மொத்தப் போக்குவரத்துச் செலவு ரூபா. 92,231,829 ஆகவிருந்தது.

2.4. கணக்கீட்டு உத்தியோகத்தரினால் இடம்பெற வேண்டிய சான்றுபடுத்துதல்.

2018 ஆம் ஆண்டின் 19 வது இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 வது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினைச் சரியானவாறு செயலாக்குவதற்கு விளைத்திறனான முறையொன்று உள்ளது எனச் சான்றுபடுத்துதல் வேண்டுமாயினும் அறிக்கையில் 4.1 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் அத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

2.5. சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காமை.
பின்வரும் மீறல்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| **சட்டதிட்டங்கள்/ஏற்பாடுகளுக்கு முன்வைத்தல்** | **விபரம்** |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 138 (1) | உறுதிச் சீட்டொன்றினை சான்றளிக்கும்போது உரிய தலைப்பு, நிகழ்ச்சித் திட்டம், செயற்திட்டம், செயற்திட்ட வகுப்பு ஆகியவை சரியாக உரிய கணக்குக்குச் செலவு வைக்கப்படுவதாக உரிய உத்தியோகத்தர் சான்றுபடுத்துதல் வேண்டுமாயினும் அவ்வாறு சான்றுபடுத்தாமல் திணைக்களத்திற்கு இந்திய உதவியினை விநியோகிப்பதற்கு மேலதிக நேரக் கொடுப்பனவினை வழங்குவதற்கு அவகாசம் இல்லாதபோது உணவு ஆணையாளரின் (300) செலவுத் தலைப்பின் 1002 செலவு விடயத்தின் கீழ் மே, யூன் மற்றும் யூலை போன்ற 3 மாதங்களுக்கு ரூபா. 1,044,797 மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (ஆ) நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ) | தற்காலிக இடைக்காலக் கட்டுநிதி நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே வழங்க முடியுமாயினும் ரூபா. 895,000 பெறுமதியான முற்பணம் நிறைவேற்றுத்தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. |

2.6. வைப்புக்கள்

திணைக்களத்தின் 2022 திசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று பொது வைப்புக்கள் தொடர்பில் ரூபா.110,095,143 மீதியொன்று காணப்பட்டுள்ளதுடன், அம் மீதிகளினுள் 02 வருடங்கள் 10 வருடங்களுக்கிடையே ரூபா. 54,930,690 மற்றும் 10 வருடங்களுக்கு அதிகமான ரூபா. 25,448,939 மீதியொன்று காணப்பட்டது. அது தொடர்பில் நிதிப. பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.7. வங்கிக் கணக்குகளினைச் செயலாக்குதல்.

2022 திசம்பர் 31 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றுப் பரீட்சிப்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) 2022 திசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று கிடைக்காத கிடைப்பனவுகள் ரூபா. 887,592 காணப்பட்டுள்ளதுடன், அதனூடாக 07 வருடங்களினைத் தாண்டிய ரூபா. 55,000 மீதியொன்று காணப்பட்டது.

(ii) இரண்டு வருடங்களுக்கும் அதிகமான அடையாளம் காணப்படாத கிடைப்பனவுகள் ரூபா. 36,650, ஒரு வருடத்திற்கும் அதிகமான ரூபா. 31,775 மற்றும் ஒரு மாதத்திற்கும் அதிகமான ரூபா. 1,353,885 என்றவாறு மொத்தக் கூட்டுதொகையாக ரூபா. 1,442,310 அடையாளம் காணப்படாத கிடைப்பனவுகள் காணப்பட்டுள்ளதுடன், அக்கிடைப்பனவுகளினை அடையாளம் காண்பதற்கு கணக்காய்வு தினம் வரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 3.1, <u>செயற்திறன்</u>

3.1.1. திட்டமிடுதல்

2020 ஆகஸ்டு 28 ஆந் திகதிய 02/2020 அரச நிதிச் சுற்றுநிருபம் தொடர்பில் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் இலக்கம் 12 இன் பிரகாரம் செயற்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய வருடாந்தச் செயற்பாடுகளுக்கான கட்டுநிதித் தேவைகளினை வழங்குதல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

3.1.2. கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

தகவல் தொழில்நுட்பக் கிளையினூடாக பொதுமக்களுக்கு நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்களினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு திணைக்களத்தின் இணையத்தளத்தினை நாளதுவரைப்படுத்துதல் செயற்றிட்டத்தினூடாக அடையாளம் காணப்பட்டபோதிலும் கணக்காய்வுத் தினம் வரையில் திணைக்களத்தின் இணையத்தளம் முறையாக நாளதுவரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.1.3. எதிர்பார்த்த பயன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை.

(அ) “ஒவ்வொரு வீட்டிலும் பாதுகாப்பான, சீரான, சத்தான தானிய உணவு” என்ற தொலைநோக்கின் பிரகாரம் செயலாக்கப்படும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் செயற்பாடுகளாக,

(i) தெற்காசியப் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் கொழும்பு சாசனம் மற்றும் 16 வது உச்சி மகாநாட்டின் பிரகாரம் 8000 மெற்றிக் தொன் விசேட அரிசி இருப்பொன்றினைப் பராமரித்தல்.

(ii) 2008 ஆகஸ்டு மாதம் 27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நாடுபூராவும் முன்னெடுக்கப்படும் உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியசாலைகளில் 100,000 மெற்றிக் தொன் பாதுகாப்பான அரிசி இருப்பொன்றினைப் பராமரித்துச் செல்லுதல் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் அச்செயற்பாடுகளினை நிறைவேற்றுவதற்காக பாதீட்டுத் திணைக்களத்தின் 300-1-1-3-2506 மற்றும் 300-1-1-4-2506 போன்ற செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா. 100,000,000 மொத்த ஒதுக்கீடும் வருட நிறைவின்போது மீதமாகியிருந்தது. அவ்வாறு காணப்பட்டபோது செயற்திறன் அறிக்கையில் 300-1-1-4-2506 என்ற செலவு விடயத்தின் கீழான செயற்திறன் காட்டியின் கீழான சந்தையில் அரிசி கிடைப்பதை சுலபமாக்குவதற்காக சிறு மற்றும் நடுத்தரளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் அரிசியினை உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தினைக் கண்காணிப்பதனூடாக சந்தையில் அரிசி கிடைப்பதை முன்னெடுப்பதற்கு பங்களிப்பு இடம்பெற்றுள்ளது எனவும் அது எதிர்பார்த்த முடிவின் பெறுபேறொன்றான உண்மையான முடிவு நூற்றுக்கு 75-89 சதவீதத்திற்கு இடையேயான வீச்சு வரை காட்டப்பட்டுள்ளதுடன், கொள்முதல் திட்ட முன்னேற்றத்தின் கீழ் நூற்றுக்கு நூறு சதவீதம் வரை காணப்பட்டது.

(ஆ) நிறுவனத்தின் வளங்களினை சிறந்தவாறு முகாமை செய்வதற்கு உரிய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளின் கீழ் களஞ்சியசாலைகள் மற்றும் இல்லங்களினை வாடகைக்கு வழங்குவதன் மூலம் அரச வருவாய்க்குப் பங்களிப்பினை நல்குதல் நூற்றுக்கு 100-90 சதவீத மட்டம் என செயற்திறன் அறிக்கையில் அடையாளம் காணப்பட்டபோதிலும் 2022 திசம்பர் மாதம் 31 ஆந் திகதிய நிலுவையிலுள்ள களஞ்சியசாலை வாடகை ரூபா. 95,448,000 மற்றும் நிலுவையிலுள்ள இல்ல வாடகை ரூபா. 8,763,133 எனக் காணப்பட்டது.

3.1.4. செயற்றிட்டங்களினை நிறைவேற்றுவதில் தாமதம்

2019 யூன் மாதம் 26 ஆந் திகதி தொடக்கம் 2019 திசம்பர் மாதம் 26 ஆந் திகதி வரையிலான 06 மாத ஒப்பந்தக் காலப்பகுதியில் தம்புள்ள வெப்பநிலையினைக் கட்டுப்படுத்தும் களஞ்சியசாலை வளாகத்தினை நிர்மாணிப்பதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டபோதிலும் ஒப்பந்தம் நிறைவு செய்ய வேண்டிய தினம் 03 வருடங்களினைத் தாண்டியிருந்தும் உரிய செயற்றிட்டத்தினை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டின் கொள்முதல் திட்டத்தினூடாக 2022 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி பணியினை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அதனை முன்னுரிமைப் பணியொன்றாகக் காட்டி ரூபா. 625 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2022 வருடாந்த மதிப்பீட்டில் அது தொடர்பில் உள்ளூர் நிதியம், வெளிநாட்டு மானியங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியீட்டத்துடன் தொடர்பிலான செலவு, செலவு விடயம் 2104 இன் கீழ் ரூபா. 246,000,000 மதிப்பீடு செய்யப்பட்டுந்தபோதிலும், உள்ளூர் நிதியம் மற்றும் வெளிநாட்டு மானியங்களின் கீழ் ரூபா. 205,400,000 தேறிய ஒதுக்கீடு 100% மும், வெளிநாட்டு

நிதியீட்டத்துடன் தொடர்பிலான செலவு உரிய தேறிய ஒதுக்கீட்டிலிருந்து 99% அதாவது ரூபா. 39,128,224 வும் மீதமாகியிருந்தது, இவ்வாறு காணப்பட்டபோது 2022 திசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று கொள்முதல் முன்னேற்றத்தின் கீழ் நூற்றுக்கு 80% முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்தது.

3.1.5. வருடாந்த செயற்திறன் அறிக்கை

2020 ஆகஸ்டு மாதம் 28 ஆந் திகதிய 02/2020 என்ற அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 12.2 வது பந்தியுடன் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் இலக்கம் 14 இன் பிரகாரம் வருடாந்தச் செயற்திறன் அறிக்கையில் 03 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் முன்வைக்கப்பட வேண்டிய நிதி செயற்திறன் கூற்று, நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 04 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்திறன் காட்டி செயற்றிட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படுதல் வேண்டுமாயினும் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2. சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

(அ) திணைக்களத்திற்கு உரித்தான 11 வாகனங்கள் காணப்பட்டபோதிலும் 09 வாகனங்கள் மாத்திரமே சிகாஸ் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் 05 வருடங்களுக்கும் அதிகமான காலத்திலிருந்து பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அவ் வாகனங்கள் தொடர்பில் 2020 ஒக்டோபர் மாதம் 20 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றுநிருப இலக்கம் 05/2020 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 திசம்பர் 31 ஆந் திகதிய 04/2018 என்ற இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 15 மாவட்டங்களின் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் 28 மேலும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

3.3. கணக்காய்வு விசாரணைகளுக்கு விடையளிக்கப்படாமை

கணக்காய்வாளர் அதிபதியினால் 2022 ஆம் ஆண்டு தொடர்பில் முன்வைக்கப்பட்ட 04 கணக்காய்வு விசாரணைகளுக்கு 2023, மே மாதம் 29 ஆந் திகதிவரையில் விடையளிக்கப்படாதிருந்ததுடன், கணக்காய்வு விசாரணைகளின் தாமதக் காலப்பகுதி 01 மாதம் தொடக்கம் 03 மாதக் காலப்பகுதியாகும்.

3.4. முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) தான்யாகம வீடமைப்புத் தொகுதி தொடர்பில் இடம்பெற்ற பரீட்சிப்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) 366 வீட்டு அலகுகளுடனான வீடமைப்புத் தொகுதியொன்றாக, தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக நிர்மாணிக்கப்பட்டு 1981 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் 21 ஆந் திகதி உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டிருந்த இத் தான்யாகம வீடமைப்புத் தொகுதியின் காணி கணக்காய்வு தினமன்று திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிட்ட 366 வீட்டு அலகுகளில் 26 வீட்டு அலகுகள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டுள்ளதுடன், அவ்வீட்டுத் தொகுதியின் 09 வீடுகள் 10 வருட காலங்களாகப் பழுதுபார்க்கப்படாதிருந்தன

(iii) 2018 திசம்பர் மாதம் 31 ஆந் திகதிய 04/2018 என்ற இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு தடைவை காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமாயினும் தான்யகம வீடமைப்புத் தொகுதியின் வீட்டு அலகுகளானவை, 2017, மே மாதம் 15 ஆந் திகதி இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது

(ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான 265,035 கொள்ளளவினைக் கொண்ட 103 களஞ்சியசாலைகள் காணப்படுவதுடன், 2022, திசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று அக்களஞ்சியசாலைகள் மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிங்களுக்கான நிலுவையிலுள்ள வாடகையாக ரூபா. 95,448,000 உள்ளது. அதில், ரூபா. 42,876,740, திணைக்களம் தற்போது வாடகைக்கு வழங்கியிருந்த 23 குத்தகைகாகரர்களிடமிருந்து கிடைக்கப்பட வேண்டிய பணம் என்பதுடன், ரூபா. 52,571,260. வாடகைக்கு வழங்கப்பட்டு மீளவும் ஒப்படைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலைகள் தொடர்பானதாகும். குத்தகைக்காரர்கள் குத்தகை வாடகை செலுத்துவதைத் தவறவிட்டபோது, குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் வளாகத்தின் உடைமையை மீட்டெடுப்பதற்கு உரிமையாளருக்கு உரித்துண்டு. ஆனால் குத்தகை வாடகை செலுத்துவதைத் தொடர்ந்து புறக்கணித்த 23 குத்தகைக்காரர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(இ) சிற்றுண்டிச்சாலைக் கட்டிடத்தை ஒரு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம், 2019, ஆகஸ்டு மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் 2022, ஆகஸ்டு 14 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்கு முறையே, ரூபா. 131,000, ரூபா. 139,400 மற்றும் ரூபா. 156,000 குத்தகை வாடகைக்கு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை வாடகையாக ரூபா. 5,116,800 பெறவேண்டியிருந்தாலும், 2020 திசம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2022 நவம்பர் மாதம் 30 ஆந் திகதி வரை மாத்திரமே ரூபா. 2,966,000 மதிப்புள்ள இன்வொய்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா. 2,443,000 நிலுவை வாடகையாகக் காணப்பட்டுள்ளதுடன், உடன்படிக்கையின் 28 வது பந்தியினை மீறியதன் காரணமாக உடன்படிக்கையினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை,. 2022 ஒக்டோபர் மாதம் 22 ஆந் திகதி சிற்றுண்டிச்சாலை தொடர்பில் திணைக்களத்தினால் பொலிசுக்கு முறைப்பாடொன்று செய்யப்பட்டு சிற்றுண்டிச்சாலை விடுவிக்கப்பட்டிருந்தது. இது வரையில் நிலுவை வாடகை அறவீடு செய்யப்படவில்லை என்பதுடன், சிற்றுண்டிச்சாலையினை வேறு தரப்பினருக்கு வழங்குவதற்கு கொள்முதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரச நிதிச் சுற்றுநிருபம் 01/2021 இன் கீழான வழிகாட்டல்கள் 01 இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் கீழ் பெற்றுக் கொள்ளவேண்டிய கடன் நிதியினை அறவீடு செய்வதற்கு தாபன விதிக்கோவையின் XXIV வது அத்தியாயத்தின் 4.4, 4.2.4., மற்றும் 4.2.5. பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேலும் அறவீடு செய்யப்பட முடியாத கடன் மீதிகள் காணப்படுமாயின் வழிகாட்டியின் (ஈ) பந்தியின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் கடன் நிலுவை மீதிகளினை கைவிடுவதற்கு நிதிப் பிரமாணம் 113 இன் கீழ் திறைசேரியின் பிரதிச் செயலாளர்/ திறைசேரி செயலாளருக்கு முன்வைப்பதற்கான வேண்டுகோள். பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு முன்வைக்கப்படுதல் வேண்டுமாயினும் அவ்வாறு செய்யாது திணைக்களத்தினால் மரணித்த, ஓய்வு பெற்ற, சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையினைத் துறந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 1,387,731 மேலும் அறவீடு செய்வதற்கு அல்லது நீக்கிவிடுவதற்குள்ள இழப்புக்கள் தொடர்பிலான கூற்றினூடாக

காட்டப்பட்டுள்ளதுடன், அதனூடாக 1-2 வருடங்களுக்கிடையே ரூபா. 346.500 கடன் மீதியும் காணப்பட்டது.

## 4. <u>நல்லாட்சி</u>

### 4.1. <u>உள்ளகக் கணக்காய்வு</u>

2018, 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) மற்றும் 40(2) வது பிரிவின் பிரகாரம், திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

**ஒப்பம்/பி.ஜி.ஐ. நிரன்ஜா,**
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதிக்காக.